112—

## சீனநாய்க்கன் குளத்தை பாதுகாத்தல்

***4746—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) தண்டராம்பட்டு தொகுதி, தானிப்பாடி, அரூர் சாலையில் சின்னையன்பேட்டை கிராமத்தின் அருகில் அரிய சிற்பங்கள் நிறைந்த சீனநாய்க்கன் குளத்தை பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தண்டராம்பட்டு தொகுதி, தானிப்பாடி, அரூர் சாலையில் அமைந்துள்ள சின்னையன்பேட்டை கிராமத்தின் அருகிலுள்ள அரிய சிற்பங்கள் நிறைந்த சீனநாய்க்கன்குளம் ஏற்கனவே பாதுகாக்கப்பட்ட சின்னமாக அரசால் அறிவிக்கப்பட்டு தொல்பொருள் ஆய்வுத் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதற்கான அரசாணை 6-5-1988-ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு தொகுதி, தானிப்பாடி, அரூர் சாலையில் உள்ள சின்னையன்பேட்டை கிராமத்தின் அருகிலுள்ள சீனநாய்க்கன் குளத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய அழகான சிற்பங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. இந்தச் சிற்பங்கள் தக்க பாதுகாப்பு ஏதுமின்றி அழிந்து போகும் நிலையில் உள்ளன. அந்தக் குளத்தைப் பாதுகாக்கிற வகையில் பாதுகாவலர் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா? இந்தக் குளத்தைப் பாதுகாத்து சுற்றுலாப் பயணிகளைக் கவர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் இது பாதுகாக்கப்பட வேண்டும். அந்த அடிப்படையில் ரூ. 50 ஆயிரம் செலவில் முட்கம்பி வேலி

1997 மார்ச் 7]

அமைப்பதற்கு இரும்புக் குழாய்கள் தயார் நிலையில் உள்ளன. எனவே வெகுவிரைவில் இந்தப் பணி நிறைவு செய்யப்படும். அடுத்த கட்டமாக, குளத்தின் உட்புறத்திலும் புறப்பகுதியிலும் விலங்குகளும் ஊர்மக்களும் தூய்மைக்கேடு செய்து விடாமல் பாதுகாக்கிற பணியில் ஒரு காவலர் அமர்த்தப்படுவார் என்ற முறையில் ஏற்கெனவே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வெகு விரைவில் இந்தப் பணிகள் முடிந்துவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு.பெ.சு. திருவேங்கடம்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஆயிரக்கணக்கான சிற்பங்கள் இருப்பதாகவும், பாதுகாக்கப்படுவதாகவும் அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். அந்தச் சிற்பங்களை அமைச்சர் அவர்கள் பார்த்துள்ளாரா, அவை என்ன வகையான சிற்பங்கள் என்று அறிவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் பார்த்து விவரம் சொன்னால் அந்த அடிப்படையில் அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும். ஏற்கெனவே தொல்பொருள் ஆய்வுத் துறையில் நூற்றுக்கணக்கான நினைவுச் சின்னங்கள் இருக்கின்றன. தமிழ்நாடு முழுவதும் அவை பரவிக் கிடக்கின்றன. இப்போது எங்களிடத்தில் இருக்கிற பெரிய துறைகளை மட்டும் நாங்கள் நேருக்கு நேர் பார்க்கிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க நாங்களே இதை நேரிலே பார்வையிடுவோமென்றாலும், வெகுவிரைவில் அந்தப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு இந்தச் சிற்பங்கள் பாதுகாக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 113, திரு. ச. இராஜரெட்டி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**113—**

**கடகத்தூர் தொழிற்பயிற்சிப் பள்ளியில் டீசல் மெக்கானிக் பிரிவு**

***4918—திரு. ச. இராஜரெட்டி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—